**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

O.S. NO. 345/2022

**வா.சா.2**

**திரு. கருப்புசாமி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்)**

சாட்சிமளிக்க நீதிமன்றத்திலிருந்து சம்மன் வரவில்லை என்றால் சரிதான். 2 ம் வாதி என் உடன்பிறந்த அண்ணனின் மனைவி என்றால் சரிதான். 2 ம் வாதிக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 40 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. 2 ம் வாதி என் அண்ணனின் மனைவி என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன்பேரில் அவருக்கு சாதகமாக சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. 2 ம் வாதியின் தகப்பனார் எப்போது காலமானார் என்றால் சுமார் 27 ஆண்டுகள் இருக்கும் தேதி, மாதம், வருடம் தெரியவில்லை. வழக்கு சொத்தை 2 ம் வாதியின் தகப்பனார் எப்போது, எவ்வளவு தொகைக்கு கிரையம் பெற்றார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படியார்களுக்கு எந்தெந்த கிராமத்தில், சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரண பூமி உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் பூமிகள் இருப்பது தெரியும் சர்வே எண்கள் தெரியாது விஸ்தீரணம் 2 ஏக்கர் ஒரு இடத்திலும், 1 ஏக்கர் மற்றொரு இடத்திலும் உள்ளது. மேற்படி பூமியின் விஸ்தீரணத்தை நான்

அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி பூமிகள் அனைத்தையும் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை மூவரும் அனுபவித்து வருகிறார்கள். மேற்படி பூமிகளில் போர்வெல் எவ்வளவு உள்ளது, எப்போது அமைக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் 2 ஏக்கர் பூமியில் போர்வெல் உள்ளது 15 ஆண்டுகளுக்கு முன்பாக போடப்பட்டது வருடம் தெரியாது. பூமியில் தான் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் 1 ஏக்கர் பூமியில் உள்ளது. மேற்படி வீட்டிற்குண்டான மின்சார கட்டணம் பிரதிவாதி செலுத்தி வருகிறார் என்றால் ஆமாம் அவர்கள் பணம் கொடுத்திருப்பார்கள். வீட்டில் பிரதிவாதி தான் குடியிருக்கிறார் என்றால் சரிதான் வாதிகள் உறவுமுறையின் அடிப்படையில் சென்று வருவார்கள். பிரதிவாதியின் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் வாதிகளுக்கும், அவர்களுக்கும் இருந்த கொடுக்கல் வாங்கல்கள் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல் வாதிகள், பிரதிவாதியின் தகப்பனார் இறந்த பின்னிட்டு சடங்குகள் நடந்துகொண்டிருக்கும்போது பேச்சுவார்த்தை நடந்ததாக சொல்கிறேனா என்றால் 16 ம் நாளில் நடந்த சடங்குகளுக்கு பின்னிட்டு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. மேற்படி பேச்சுவார்த்தையில் யார் யார் கலந்துகொண்டார்கள் என்றால் நிறைய பேர் இருந்தார்கள் யார் யார் என்று என்னால் குறிப்பாக சொல்ல இயலவில்லை. பூமி சம்பந்தமாக வேறு வழக்குகள் நடந்தது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. பூமி சம்பந்தமான வருவாய் துறை ஆவணங்கள் மற்ற ஆவணங்கள் குறித்து எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். எனக்கு தாவா சொத்து சம்பந்தமாகவோ, உபயவாதிகளுக்கு இடையே என்ன பேச்சுவார்த்தை நடந்தது

என்பது குறித்தோ எனக்கு நேரில் தெரியாது என்றும், 2ம் வாதிக்கு அவர் கேட்டுக்கொண்டதன்பேரில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.